பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விஜய 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 09 திங்கட்கிழமை 26.09.2022 கதிர் 323

இனிது ரகசியம் அல்ல!

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ஒவ்வொரு விதமான, புதுப் புதுச் சட்டங்களினால் கபளீகரம் செய்யப்படுவதுதான் இப்போது தமிழர் அரசியலில் மிகச் சூடான, துரதிர்ஷ்டவசமான விவகாரம்.

வடக்கில் நந்திக் கடல், 2

# தமிழர் தாயகம் எங்கும் இன்று தியாகி திலீபன் நினைவேந்தல்

## அவர் சாவைத் தழுவிய நல்லூர் மண்ணில் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலிப்பர்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26

**அகிம்சை வழியில் உண்ணாவிரதமிருந்து உன்னத இலட்சியத்திற்காய் உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் நினைவுத் தூபியடியில் இன்று காலையில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.** 10

## 'கொமடி' அரசியல் செய்கிறார் ரணில்!

### மனோ கணேசன் சீற்றம்



தமிழ் கைதிகளின் பெயர் பட்டியலை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிரிப்பு அரசியல் காட்டுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். 10

## நினைவுத் தூபி அருகே நேற்றும் வாக்குவாதம்!

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் அணி மற்றும் மணிவண்ணன் அணிகளுக்கு இடையே நேற்று மாலை 6 மணியளவில் யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக வாக்குவாதம் ஏற்பட்டது. திடீரென ஏற்பட்ட 10

## சீனா - இலங்கை துரித பேச்சுக்கு இணக்கமாம்!



இலங்கை மற்றும் சீன தங்களுக்கிடையேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளை துரிதப்படுத்த 10

## ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது மன்னிப்புச் சபை கண்டனம்!

கொழும்பில் முக்கிய பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தமையை எதிர்த்து நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டதனை சர்வதேச 10

## மணிக்கு 32 பேர் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து செல்கிறார்களாம்

### கரு ஜயசூரியா அதிர்ச்சித் தகவல்



ஒரு மணித்தியாலத்திற்கு 32 பேர் இலங்கையை விட்டு வெளிநாடு செல்கின்றனர் எனத் தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, நாடு துரிதமாக வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது என்பதற்கான அறிகுறி இது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபத்தில் இடம்பெற்ற 2

## ஆர்ப்பாட்டத்தின் போது கைதான 83 பேருமே பிணையில் விடுவிப்பு!

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சோசலிச இளைஞர் சங்கத்தினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போது கைது செய்யப்பட்ட 83 பேரும் 10


## ஜப்பானுக்கு ரணில் புறப்பாடு



உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை (ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு பயணமானார். 2

## ரூ.2 கோடி பெறுமதி பொருள்களை கடத்த முயன்ற இளம் பிக்கு கைது!

### கட்டுநாயக்காவில் வசமாகச் சிக்கினார்



இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்க ஆபரணங்களை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வந்த பிக்கு ஒருவர் கட்டுநாயக்க 10

## ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக - 24; ஆதரவாக - 11

### நாடுகளின் பங்களிப்பு இப்படி அமையுமாம்

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் முன்வைக்கவுள்ள பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் 47 நாடுகள் கொண்ட பேரவையில் இலங்கைக்கு 11 வாக்குகள் மட்டுமே கிடைக்கும் என ஜெனிவா ராஜதந்திர தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. 2

## 25 பவுண் நகை, ரூ.4 லட்சம் பணம் திருவையாறில் தம்பதியரைக் கட்டிப் போட்டுத் தாக்கிக் கொள்ளை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.25

கிளிநொச்சி திருவையாறு 2ஆம் பகுதியில் உள்ள ஓர் வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்கள் 25 பவுண் தங்க நகைகளையும் 4 லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

திருவையாறு 2ஆம் பகுதி கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரது வீட்டிற்கு நேற்று அதிகாலை 12 மணியளவில் சென்ற மூவர் பெயரைக்கூறி அழைத்துள்ளனர். இதனையடுத்து வீட்டில் இருந்த முதியவர் சென்று கேற்றை திறந்தபோது உடனடியாகவே அவரைத் தாக்கியுள்ளனர். வீட்டு 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயாறு மற்றும் கிழக்கில் திருகோணமலையின் சாம்பல் தீவு உள்ளிட்ட பகுதிகளை வனப் பாதுகாப்பு வலயங்களாக அரசு பிரகடனப்படுத்தி அந்த இடங்களையும் கபளீகரம் பண்ணப் போகின்றது என இப்போது செய்திகள் வெளியாகின்றன.

ஆனால் உண்மையை ஒரு தடவை 'செக்'பண்ணிப் பார்த்தால் வேறு விதமான தகவல்கள் கிடைக்கின்றன.

இவற்றில் நந்திக்கடல், நாயாறு போன்றவை மேற்படி வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நல்லாட்சி அரசின் காலத்திலேயே பிடுங்கப்பட்டு விட்டனவாம். கவனிக்குக:- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசில், தமிழர் தரப்பு அவரது அரசுக்கு முண்டு கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டிருந்த காலத்தில்தான், கூட்டமைப்புக்கும் தெரியாமல், தமிழர் தாயகத்தைபிடுங்குமாற்போலஎமதுஅடிமடியை உருவிப் பிடுங்கியிருக்கின்றது ரணிலின் நிர்வாகம்.

சாம்பல்தீவு விடயம் வேறு. இப்போதுதான் அதற்கு முயற்சி நடக்கின்றது. இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சம்பந்தப்பட்ட அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதைச் சவாலுக்கு உட்படுத்தி கடந்த வாரம் அமைச்சரவையில் கடுமையாக மோதி இருக்கின்றார் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வேறு வழியின்றி அமைச்சர்கள் அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, சுற்றுச்சூழல் அமைச்சர் நஸீர் அஹமட் ஆகிய மூவரடங்கிய அமைச்சரவை உபகுழு ஒன்றை நியமித்து, விடயத்தைத் தீர்த்துக் கொண்டு வாருங்கள் என ஒப்படைத்து இருக்கின்றார்.

அமைச்சரவை உபகுழு தத்தமது உயர் அதிகாரிகளுடன் கூடியும் தீர்வு வரவில்லை. கடும் பிடுங்குப்பாடுதான். கடற்றொழில் அமைச்சர் விட்டுக் கொடுப்பவராக இல்லை. அதனால் முதலாம் சுற்றுப் பேச்சு சரிவராத நிலையில் அடுத்த சுற்று பேச்சுக்கு விடயம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சவாலை அமைச்சரவை உபகுழுவில் எப்படி மோதிச் சமாளிப்பது என்பது குறித்த தந்திரோபாயத் தயார்படுத்தலுக்காக கடற்றொழில் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் இன்று கொழும்பில் சம்பந்தப்பட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தவிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

நல்லாட்சி அரசில் வெறும் பிரதமராக இருந்தபடி, கூட்டமைப்பினரை அணைத்து கொண்டு, தமிழரின் தாயகத்தின் அடிமடியையே உருவ முடிந்த ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தினால், இப்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியையும் வைத்துக் கொண்டும் கூட, தனி ஒரு அமைச்சரான டக்ளஸைத் தாண்டி அதைச் செய்வது கஷ்டமாகத்தான் இருக்கின்றது.

Credit goes to Douglas. He deserves it.

* * *

இன்று தியாகி திலீபனின் நினைவு தினம். அவருடன் நெருங்கிப் பழகி, ஊடாடிய ஊடகவியலாளன் என்ற பின்புலத்தில் ஒரு சிந்தனைத் தெறிப்பு இது.

ஆயுதம் தாங்கிய வன்முறை போராட்டத்தின் மத்தியில் முகிழ்ந்த ஒருவனினால் அறநெறியில் - அகிம்சை வழியில் - சாத்வீகப் பாதையில் - அந்தப் போராட்ட மார்க்கத்தின் உச்சியை எப்படித் தொட முடிந்தது? காந்திஜியையும் மிஞ்ச முடிந்தது?

எங்களின் வழி அஹிம்சை நெறி என்று கூறும் தற்போதைய தமிழர்களின் தேசியத் தலைமைகளால் அத்தகைய அஹிம்சைப் போராட்டம் என்ற ஒன்றை உச்ச நிலையில் - கொதி நிலையில் - வைக்க முடியவில்லையே. ஏன்?

ஒரே காரணம்தான்.

புலிகளிடம் தங்களின் இலக்கின் மீது - நோக்கின் மீது - பற்றுறுதி, திடசங்கற்பம் மிகத் தெளிவாக இருந்தது. அது மட்டுமே இருந்தது.

நமது இப்போதைய தலைமைகளின் போராட்டம் பற்றிய பேச்சுக்கள் எல்லாம் வெறும் வாய்ப் பந்தல்கள் மட்டுமே. பதவிகளை எட்டவும், அவற்றைத் தக்க வைக்கவுமான வாய்ச்சவடால்கள்தான் அவை.

ஆயிரம் கரும்புலிகளுக்கு மத்தியில் காந்தியை மிஞ்சிய அகிம்சை வீரனையும் கூடத் தலைவர் பிரபாகரனால் உருவாக்க முடிந்தது என்றால் இலட்சியப் பற்றுறுதி மட்டுமே அதற்குக் காரணம்.

அகிம்சை போராட்டத்தை நடத்தும் நமது தமிழ் தலைவர்களிடம் இருப்பவர்கள் எல்லோருமே - அவர்கள் (தலைவர்கள்) உட்பட - வெறும் கார்ட்போர்ட் சண்டியர்கள்தான். வாய்ப்பந்தல் போடும் சவடால் போர்வழிகள்தான். அதனால்தான் இனத்துக்கு இன்று இந்த இழி நிலைமை.

- மின்னல் -

## ஜப்பானுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் ஜப்பானுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், ஜப்பானின் முன்னாள் பிரதமர் சின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவுள்ளார்.

இதனையடுத்து ஜப்பானிய பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

அதன்பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் 28 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் செல்கின்றார். இதன் போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங்பொங் மார்கஸ் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகாவா ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் விஜயங்களை நிறைவு செய்துகொண்டு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு திரும்புவார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, சர்வதேச அலுவல்கள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, ஊடக பணிப்பாளர் ஹனுக் கருணாரத்ன, நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான பணிப்பாளர் ரந்துல அபேவீர, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோர் இந்த விஜயத்தில் பங்கேற்கின்றனர்.

இதேவேளை ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயத்தில் திறைசேரி செயலாளரும் இணைந்து கொள்ள உள்ளார். பிலிப்பைன்ஸ் விஜயத்தில் தினுக் கொலம்பகே மற்றும் ரந்துல அபேவீர பங்கேற்க மாட்டார்கள்.

## மணிக்கு 32 பேர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் இதனை குறிப்பிட்டுள்ள அவர் கடந்த 8 மாதங்களில் 500 மருத்துவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொறியிலாளர்கள் உட்பட நூற்றுக்கணக்கான புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். கடுமையான ஏமாற்றத்தையும் விரக்தியையும் எதிர்கொண்டுள்ள இவர்கள் தங்கள் பிள்ளைகளிற்காவது சிறந்த கல்வியை வழங்கலாம் என்ற எதிர்பார்ப்பில் நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைழக கல்விக்கான அவசியமான வளங்கள் இலங்கையில் இல்லாததன் காரணமாக பெற்றோர் தங்கள் சொத்துக்களை விற்றுவிட்டு வெளிநாடுகளிற்கு செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாங்கள் எங்கள் எதிர்கால இயந்திர வளங்களை இழக்கின்றோம். இலங்கையிலிருந்து வெளியேறும் அனைத்துத் தனிநபர்களும் இலங்கையின் இலவசக் கல்வி மூலம் உருவாக்கப்பட்டவர்கள் எனவும் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது, நாடு துரிதமாக வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது என்பதற்கான அறிகுறி எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இந்த விடயங்கள் குறித்து அனைத்து பொதுமக்களும் ஆழமான புரிந்துணர்வை கொண்டிருக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிமிடம் வரை நாட்டை மீள கட்டியெழுப்ப முடியும் என்றே நம்பிக்கை கொண்டுள்ளோம், இதற்கு தேசிய ஐக்கியமும் கருத்தொருமைப்பாடும் மிகவும் அவசியம் இது நாடாளுமன்றத்தின் ஊடாக உருவாக வேண்டும், கருத்தொருமைப்பாடு பொதுமக்கள் ஊடாக உருவாக வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2020 இல் நிறைவேற்றப்பட்ட 20 ஆவது திருத்தமே நாட்டில் ஜனநாயகம் முற்றாக அழிவடைவதற்கு காரணம் என தெரிவித்துள்ள கருஜெயசூரிய, 20 ஆவது திருத்தம் குறித்து எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் மக்களின் கருத்துக்களை அறிய முயலவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தம் மூலமே நாடு அழிக்கப்பட்டது அந்த திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட தருணம் முதல் நாங்கள் - நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தினர் - அதனை எதிர்த்தோம் என குறிப்பிட்டுள்ள முன்னாள் சபாநாயகர் அதில் உள்ளடங்கியுள்ள பல ஆபத்துக்களை அடையாளம் கண்டு தெரிவித்தோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக அரசமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை மீண்டும் வலுப்படுத்தவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளோம். உறுதியளித்தபடி நீதிமன்றத்தின் பரிந்துரைகளிற்கு ஏற்ப சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அடுத்த நாடாளுமன்ற அமர்வில் நிச்சயமாக இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது மக்களிற்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதி மக்கள் எதிர்கொண்டுள்ள நாளாந்த அவலங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும். - என அவர் தெரிவித்துள்ளார்.

## ஜெனிவாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இலங்கைக்கு எதிராக 22 முதல் 24 வாக்குகள் கிடைக்கும் வாய்ப்புள்ளமையுடன் 12 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளா எனவும் தற்போது கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் 47 நாடுகள் அங்கம் வகித்து வருகின்றன. இம்முறை அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, மொண்டினீக்ரோ உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள யோசனைக்கு மேலதிகமாக மனித உரிமை ஆணையாளர் இலங்கை சம்பந்தமாக முன்வைத்துள்ள அறிக்கையிலும் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பாதுகாப்பு செலவுகளை குறைத்தல், வடக்கு, கிழக்கில் இராணுவத்தை குறைத்தல், பொருளாதார குற்றங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் உட் பட பல பிரதான பரிந்துரைகள் அவற்றில் அடங்கும்.

ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான யோசனை சம்பந்தமான வாக்கெடுப்பு எதிர்வரும் 4 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளுக்கு இடையில் ஒரு நாள் நடைபெறவுள்ளது.

## 25 பவுண் நகை, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளரைத் தாக்கியவர்கள் அவரை இழுத்துச் சென்று வீட்டிற்குள் சென்று மனைவியையும் தாக்கியுள்ளனர்.

இருவரையும் கொள்ளையர்கள் கை, கால் என்பவற்றைக் கட்டி விட்டு பணம் நகை எங்கே உள்ளது என வினாவியுள்ளனர். அதன்போது மனைவி கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியையும் கையில் இருந்த காப்பையும் கழற்றிக் கொடுத்த போது தாலிக்கொடி எங்கே எனக் கேட்டு மீண்டும் இருவரையும் தாக்கியுள்ளனர்.

தாலிக்கொடி இல்லை எனத் தெரிவித்த போது "பகல் கலியாணவீட்டிற்குச் சென்று வரும்போது தாலிக்கொடி போட்டுச் சென்றாய்" எனக் கேட்டு தாக்கியுள்ளனர். இதன் பின்பு அதிகாலை 3 மணி வரையும் வீடு முழுவதும் தேடுதலில் ஈடுபட்டு, தாலிக்கொடி உள்ளிட்ட ஏனைய நங்க நகைகள் மற்றும் பணம் 4 லட்சத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

தப்பிச் சென்ற சமயம் வீட்டிலிருந்த கைத்தொலைபேசிகளையும் வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளையும் எடுத்துக்கொண்டு சென்றுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலில் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொள்ளை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மோப்பநாய் சகிதம் தேடுதலில் ஈடுபடுகின்றனர்.







# நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை நடத்த அவதானம்!

## ஜனாதிபதி எடுக்கிறார் என்கிறார் வாசு



நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார். நாட்டு மக்களுக்கு நாடாளுமன்றம் மீது நன்மதிப்பு கிடையாது.

ஆகவே நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்ல ஆதரவு வழங்குவோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதை தடுக்க பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷ எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை நாட்டு மக்கள் கடுமையாக வெறுக்கும் பின்னணியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் கிடையாது.பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் கடுமையான அழுத்தத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 38 இராஜாங்க அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாளகளில் அமைச்சரவையையும் விஸ்தரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை வெறுக்கத்தக்கதாகும்.

அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை. பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு தேசிய சபை என்ற நாடாளுமன்றக் குழுவை அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.தேசிய சபையின் செயற்பாடுகள் தொடர்பாகத் தெளிவற்ற தன்மை காணப்படுகிறது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துமாறு அரசியல் கட்சிகள் குறிப்பிட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு நாடாளுமன்றம் மீது நன்மதிப்பு கிடையாது,ஆகவே நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்ல ஆதரவு வழங்குவோம். – என்றார்.

# உணவு, விவசாய முகவரமைப்புக்கான அமெரிக்க பிரதிநிதி இலங்கை வருகை



ரோமிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய முகவரமைப்புக்களுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சின்டி மெக்கெய்ன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து, இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் உணவு உதவி திட்டங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்யவுள்ளார்.

அத்தோடு இலங்கையின் நலன்கள் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள உறுதிப்பாடு மற்றும் இலங்கையுடனான நீடித்த பங்காண்மை ஆகியவற்றை மீள வலியுறுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளார். சின்டி மெக்கெய்ன் நாட்டில் தங்கியிருக்கும் நாள்களில் கொழும்பில் முக்கிய அரச தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களுக்கு மேலதிகமாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன் இணைந்து மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் சமூக அமைப்புக்களுக்கு விஜயம் செய்து அமெரிக்க அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட மனிதாபிமான உதவித்திட்டங்கள் ஊடாக நிவாரணம் பெற்றவர்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## திலீபனின் சாக்காடு

உலகுக்கு அஹிம்சையின் உயர்வைப் போதித்த காந்தி தேசத்துக்கே அந்த அஹிம்சையின் தீவிரத்தின் எல்லை யாது என்பதை உணர்த்தியவன் தியாகி திலீபன்.

அஹிம்சையின் – அறநெறியின் – வன்முறையற்ற சத்தியத்தின் – போராட்டப் பாதையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் காந்தி மகானாக இருக்கலாம். ஆனால் அவர் அந்த சத்திய சோதனையின் உச்சத்தை தொட்டவர் அல்லர்.

தன்னுடைய நீதி, நியாயமான கோரிக்கைகளை நிலைநிறுத்துவதற்காக அவர் பல தடவைகள் உண்ணா நோன்பிருந்தார் என்பது உண்மைதான். எனினும் நீராகாரம் அருந்தி, தமது இலக்கையும் நோக்கையும் எதிர்த் தரப்பாரிடம் இருந்து எட்டுவதற்கு நீண்ட கால அவகாசம் வழங்கியே, அந்தப் போராட்டங்களில் அவர் குதித்தார். அதனால் தமது அஹிம்சை போராட்டத்தின் எல்லையைத் தொட வேண்டிய நிர்ப்பந்தமும் கட்டாயமும் அவருக்கு ஏற்படவில்லை. பல முறை உண்ணாவிரதப் போராட்டங்களில் குதித்த அண்ணல் மகாத்மா காந்தி அந்த சத்திய போராட்டங்களுக்காக தற்கொடை அளிக்க வேண்டிய தேவை ஏற்படாமல் தப்பியது இப்படித்தான்.

ஆனால் ஈழத்தில் காந்தியத்தை புடம் போட்டுக் காட்டிய பார்த்திபன் – தியாகி திலீபன் – வித்தியாசமானவன்.

தான் இறங்க போகும் சத்திய வேள்வியில் தான் இறக்கப் போவது நிச்சயம் என்று தெரிந்து அதில் தற்றுணிவோடு குதித்தவன் அவன். அந்த அஹிம்சை போரில் தனது உயிரை குறுகிய காலத்தில் தற்கொடையளிக்க வேண்டியிருக்கும் என்பது அவனுக்கு நன்கு தெரிந்திருந்தது. விளைவுகளை மிகத் திடமாக அவன் உணர்ந்து இருந்தான். தான் காலடி எடுத்து வைக்கும் போராட்டத்தில், குறுகிய காலத்தில், தான் அணு அணுவாகச் சாக வேண்டி இருக்கும், உணர்விருக்க உறுப்புகள் செயலிழக்கும் வலியை உணர வேண்டி இருக்கும் என்பவற்றையெல்லாம் அறிந்து கொண்டுதான் அவன் களத்தில் குதித்தான்.

தன் இயக்கத்தின் – தான் தலைமை தாங்கும் அரசியல் பிரிவின் – கொள்கைத் தீவிரத்தை – பற்றுணர்வை – உலகுக்கு, குறிப்பாக அயல் தேசமான இந்தியாவுக்கும் அதன் மொழியிலும் உணர்த்துவதற்கு அவனுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.

இந்திய தேசத்துக்கு அதன் காந்திய மொழியிலேயே – அந்த மொழியின் தீவிரத்திலேயே – அவன் தன் இயக்கத்தின் கொள்கை திடசங்கற்பத்தை உணர்த்த முயன்றான். காந்தியோடு காந்தியமும் மரணித்து விட்டதால், அவன் மொழியின் வீச்சம் காந்தி தேசத்தின் காதுகளில் விழவேயில்லை.

அறநெறியைப் போதித்த அண்ணல் காந்தி கூட பரீட்சித்துப் பார்க்க முடியாத – ஒரு சொட்டுத் தண்ணீர் கூட உள்ளெடுக்காமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என்ற – உச்ச அறநெறித் தீவிரத்தை துணிச்சலோடு அவன் கையில் எடுத்தான்.

அவனுக்கு முன்னரும் சரி, அவனுக்கு பின்னர் இந்த 35 ஆண்டு காலத்திலும் சரி, அஹிம்சையைப் போதிக்கும் எந்த மகானும், எந்த தத்துவர்களும், நினைத்துக் கூடப் பார்க்க முடியாத போராட்டத்தை, இரண்டு வாரங்கள் உணர்வோடும், உயிரோடும், அந்தப் போராட்டம் தந்த நீங்க வலியோடும், தாகப் பசியோடும், அணு அணுவாக அனுபவித்து, திரண்ட தன் மக்கள் கூட்டத்தின் முன்னால் அந்தச் சித்திரவதையைப் புன்சிரிப்புடன் அனுபவித்து, தலைவனும் மற்றோரும் பார்த்திருக்கத் தன்னுயிரை உலகுக்கு ஈந்தவன் பார்த்திபன்.

*“புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து”* – என்றான் செந்நாப் போதன் திருவள்ளுவன்.

‘தலைவனுடைய கண்களில் நீர் பெருகுமாறு வீர மரணம் அடைந்தால் அத்தகைய மரணத்தை யாசித்தாவது பெற்றுக் கொள்வதில் பெருமை உண்டு’ – என்று இக்குறளுக்கு அர்த்தம் சொன்னார் கலைஞர் கருணாநிதி.

அந்தப் பெரும்பேறு பெற்றவன் திலீபன். அவனது 35 ஆண்டு நினைவு நிறைவில் அந்தப் பெருமகனின் ஆன்மா தமிழர் தேசத்திற்கு வழிகாட்டுவதாக!

# அரசில் இணைந்த சு. க. உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்க மத்தியகுழு அவதானம்

## ரோஹண லக்ஷ்மன் பியதாஸ கருத்து



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழு தீர்மானத்தை மீறி அரசாங்கத்தில் இணைந்த உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் வகித்த சகல பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சி தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களை கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பில் மத்திய குழு தீர்மானிக்கும் என்று பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

அதற்கமைய நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, ரஞ்சித் சியம்பலாப்பிட்டி, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் அவர்கள் வகித்த அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இவர்கள் கட்சியின் மத்திய குழு அங்கத்துவத்திலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் கட்சியிலிருந்தும் நீக்கப்படுவார்களா என்று வினவியதற்கு பதிலளித்த பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ –

மத்திய குழு தீர்மானத்தை மீறி செயற்பட்டமைக்காக ஒழுக்காற்று குழுவால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு இவர்கள் இவ்வாறு செயற்பட்டமை தொடர்பில் ஒழுக்காற்று குழுவில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான கால அவகாசமும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்திற்குள் அவர்கள் ஒழுக்காற்று குழுவில் முன்னிலையாகி உரிய காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

இவர்களால் தெரிவிக்கப்படும் காரணிகள் மத்திய குழுவில் மீளாய்வு செய்யப்படும். அதன் பின்னரே இவர்களை கட்சியிலிருந்து நீக்குவதா இல்லையா என்ற தீர்மானம் எடுக்கப்படும்.

விரைவில் சகல தொகுதி அமைப்பாளர்களையும் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளார். வெற்றிடம் ஏற்பட்டுள்ள தொகுதிகளுக்கு புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி தேர்தலுக்காக இவர்களை தயார்படுத்துவதற்காகவே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக்கொள்வதே சுதந்திர கட்சியின் இலக்காகும். – என்றார்.

# அதிக மின்சார தேவை கொண்ட மத ஸ்தலங்களுக்கு சூரிய மின் உற்பத்திக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமாம்!

## ஜனாதிபதி ரணில் உத்தரவாதம்

பௌத்த விகாரைகள் உட்பட பதிவு செய்யப்பட்ட ஏனைய மதத் தலங்களில் 180 அலகிற்கும் அதிக மின் பாவனையைக் கொண்டவையே அதிக மின்கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறு அதிக மின்சார தேவை கொண்ட மத வழிபாட்டு தலங்களில் சூரிய மின்உற்பத்திதொகுதியைப்பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மத வழிபாட்டுத் தலங்களில் மின்கட்டண நெருக்கடி தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளையடுத்து மகாசங்கத்தினருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அண்மைக் காலமாக நாட்டில் படிப்படியாக வளர்ச்சியடைந்த பொருளாதார நெருக்கடியின் நேரடி விளைவாகவே மின்சார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியிலிருந்து பொது மக்கள் மற்றும் அனைத்து மத சமூகமும் மீளக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும்.

பௌத்த விகாரைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஏனைய மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 42 950 பிரதான மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இவற்றுக்காக 9 கோடியே 10 லட்சம் மின் அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய மின் கட்டண முறைமையின்கீழ்சாதாரணமின்அலகொன்றுக்கு 7 ரூபா 17 சதம் அறவிடப்படுகிறது. இதே வேளை சகல மதத் தலங்களுக்கும் மின் அலகொன்றுக்கு 11 ரூபா 46 சதம் அறவிடப்படுகிறது.

தற்போது பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 15 527 இல் மாதத்திற்கு 30 அலகுகளுக்கும் குறைவாகவே மின் பாவனை காணப்படுகிறது.

இதே போன்று 9441 மத தலங்கள் உள்ளிட்டவை 31 – 90 இற்கு இடைப்பட்ட மின் அலகுகளையும் , மேலும் 3274 மத தலங்கள் உள்ளிட்டவை 91 – 120 அலகுகளையும், மேலும் 4972 மத தலங்கள் உள்ளிட்டவை 121 –180 மின் அலகுகளையும் பயன்படுத்துகின்றன.




பௌத்த விகாரைகள் மற்றும் ஏனைய பதிவு செய்யப்பட்ட மத மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் 33 214 இல் புதிய மின் கட்டண திருத்தத்திற்கமைய மாதாந்தம் செலுத்தப்பட வேண்டியுள்ள அதிகூடிய மின் கட்டணம் 4000 ரூபாவாகும்.

இதனை விட அதிக கட்டணத்தை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளமை 180 மின் அலகுகளை விட அதிக மின்சாரத்தை பாவிக்கும் 9800 மத வழிபாட்டு தலங்களுக்கு மாத்திரமேயாகும்.

அதன்படி, 180 அலகிற்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் விகாரைகள் அல்லது பிற மத வழிபாட்டுத் தலங்கள் என்றும், 180 அலகிற்கு மேல் மின்சாரம் பயன்படுத்துபவை என்றும் இரண்டு வகையாகக் கண்டறியலாம்.

புதிய மின்கட்டண திருத்தத்தால், 180 அலகிற்கு மேல் அதிக மின்சாரம் பயன்படுத்தும் இடங்கள் பாதிக்கப்படுவது உண்மைதான்.

எனவே அதிகளவான மின்சாரத்தை பாவிக்கும் மதத் தலங்களில் எவ்வாறு மின்சாரத்தை முகாமைத்துவம் செய்வது என்பதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கும், அதிக மின்சார தேவை காணப்படுகின்ற வழிபாட்டு தலங்களில் சூரிய மின் உற்பத்தி களங்களைப் பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**


**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# எந்த ஒரு பயங்கரவாதச் செயலையும் கூட நியாயப்படுத்துவதை அனுமதிக்க முடியாது

## ஐ.நா. பொதுச் சபையில் ஜெய்சங்கர் காட்டம்




நியூயோர்க்,செப்.25

எந்த ஒரு பயங்கரவாத செயலையும் நியாயப்படுத்த முடியாது என்று ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்தார். பாகிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாதிகளை கறுப்புப் பட்டியலில் சேர்க்க இந்தியா, அமெரிக்கா மற்றும் பல மேற்கத்திய நட்பு நாடுகள் பலமுறை ஐ.நா.சபையில் தீர்மானங்கள் கொண்டு வந்தன. ஆனால் இந்த விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்ட சீனா, தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அந்த தீர்மானம் நிறைவேறாமல் தடுத்து நிறுத்தியது.

இந்த நிலையில் நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையின் உயர்மட்ட அமர்வில் இந்தியா சார்பில் பேசிய வெளிவிவகாரத்துறை மந்திரி ஜெய்சங்கர் இதை கடுமையாகக் குறை கூறினார்.

இதுதொடர்பாக தனது உரையில் அவர் கூறுகையில், “கடன், உணவு மற்றும் எரிசக்தி, பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஜி20 நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படும். பல தசாப்தங்களாக எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் இந்தியா பாதிக்கப்பட்டு வருகிறது. எனினும் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை அணுகுமுறையை இந்தியா உறுதியாக பின்பற்றுகிறது.

எங்கள் பார்வையில், எந்த ஒரு பயங்கரவாதச் செயலையும் நியாயப்படுத்த முடியாது. எவ்வளவு புனிதமானதாக இருந்தாலும், பயங்கரவாதத்தின் இரத்தக் கறைகளை மறைக்க முடியாது. ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட பயங்கரவாதிகளைப் பாதுகாக்கும் நாடுகளும் உள்ளன. ஐ.நாவின் தடைகளை அரசியலாக்குபவர்கள், சில சமயங்களில் பயங்கரவாதிகள் என்று அறிவிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் அளவிற்கு கூட அதை செய்கிறார்கள். அவர்களின் சொந்த நலனுக்கோ அல்லது அவர்களின் நற்பெயருக்கோ அதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை – என்று ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மேலும், ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெசுடன் உலகளாவிய சவால்களை அழுத்துவது பற்றிய விரிவான விவாதம் நடைபெற்றது.


நிகழ்ச்சி நிரலில் உக்ரைன் மோதல், ஐ.நா. சீர்திருத்தம், ஜி20, காலநிலை நடவடிக்கை, உணவுப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான தரவு ஆகியவை அடங்கும் என்று ஜெய்சங்கர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

# சரிவை நோக்கி சீனா!

‘உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி’ என்பதை போல, சீனாவுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிக்கல்கள் அதிகரித்து வருகின்றன.

கொரோனாவுக்கு முன் இருந்த சீனாவின் வளர்ச்சிக்கும், இப்போதைய நிலைக்குமான வித்தியாசம், அதிர்ச்சி அளிப்பதாகவே உள்ளது. இதன் காரணமாக, சீன மக்களின் மனங்களிலும் அண்மைக் காலமாக அதிருப்தி அதிகரித்து வருகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் முதன்முறையாக, ஆசிய வளரும் நாடுகள், சீனாவை விட வேகமான வளர்ச்சியை காணும் என ஆசிய மேம்பாட்டு வங்கி தெரிவித்துள்ளது. அத்துடன் மேலும் பல மதிப்பீட்டு நிறுவனங்கள், சீனாவின் வளர்ச்சி குறித்த தங்கள் கணிப்பை தொடர்ந்து குறைத்து வருகின்றன.






சீனாவின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, நடப்பு ஆண்டில், 3.5 சதவீதமாக இருக்கும் என்றும், இது, கடந்த 40 ஆண்டுகளில் குறைவான வளர்ச்சியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக வெளிவரும் பொருளாதார அறிக்கைகள், சீனாவின் வளர்ச்சியை குறைத்து கணித்திருக்கின்றமையுடன், உலக வர்த்தக வளர்ச்சியில் சீனாவின் பங்கு, அடுத்த ஐந்து ஆண்டுகளில் பாதியாகக் குறைந்துவிடும் எனவும் எச்சரிக்கின்றன.

மின்சாரப் பற்றாக்குறை, கொரோனா பரவல் போன்றவை அந்நாட்டின் உற்பத்தி வளர்ச்சியை ஒரு கை பார்த்துவிட்டன. செப்டம்பரில் தொழில் துறை உற்பத்தி மேலும் மோசமாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. கடந்த 2016 முதல் 2021 வரையிலான காலத்தில், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சியில் முதலிடத்தில் இருந்த சீனா, 2021 – 2026 கால கட்டத்தில், வேறு ஆசிய நாடுகளால் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும் என்கின்றனர் நிபுணர்கள்.

கொரோனா தொற்றுக்கு அடுத்து, சீனப் பொருளாதாரத்தை பாதிக்கும் மிகப்பெரிய வியமாக உள்ளது, அந்நாட்டின் ரியல் எஸ்டேட் துறை சமீப காலத்தில் இத்துறையில் ஏற்பட்ட பாதிப்பு, சீன பொருளாதாரத்தை அசைத்துள்ளது. சி.சி.பி. எனப்படும் சீனா கட்டுமான வங்கி நிறுவனம், ரியல் எஸ்டேட் ‘டெவலப்பர்’களிடம் இருந்து சொத்துக்களை வாங்க, 35 ஆயிரம் கோடி ரூபாயை (இந்தியப் பண மதிப்பில்) திரட்ட உள்ளது. அரசும் வீடுகளை வாங்குவதற்கான வட்டியை குறைப்பது, டெவலப்பர்களுக்கு தேவையான நிதியுதவி செய்வது என பல நடவடிக்கைகளில் இறங்கி, பொருளாதாரத்தை பாதுகாக்க முயற்சிக்கிறது.

வாடகை வீடுகள் தொடர்பான நிலுவையில் உள்ள வங்கிக் கடன்களும் மலை போல அதிகரித்து வருகின்றன. சீனாவில் குழந்தை பிறப்பு குறைந்து வருவது கூட, அதன் பொருளாதார சரிவைக் காட்டுகிறது எனக் கூறப்படுகிறது. நாட்டின் பொருளாதார நிச்சயமற்ற நிலை, எதிர்கால நம்பிக்கையை குறைப்பதாக இருப்பதால், குழந்தைகள் பெற்றுக் கொள்வதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது. இதற்கிடையே, சீனாவின் கணிக்க இயலாத நடவடிக்கைகள், நம்பகத்தன்மை குறைந்து வருவது, திறன் குறைந்து வருவது ஆகியவை காரணமாக, பல உலகளாவிய நிறுவனங்கள், சீனாவிலிருந்து வெளியேறும் முயற்சியில் இறங்கி உள்ளன.

குறிப்பாக உலக நிறுவனங்களின் பார்வை, சீனாவிலிருந்து இந்தியாவின் பக்கம் திரும்ப துவங்கி உள்ளது. இதுவும், சீன பொருளாதாரத்தை புரட்டி போட்டு விடும் என கருதப்படுகிறது. இன்னொரு பக்கம் இயற்கையும், சீனாவுக்கு எதிரான சீற்றத்தை காட்டி வருகிறது.

அங்கு நிலவும் கடும் வெப்ப அலைகளால், 66 நதிகள் காய்ந்து போய்விட்டன எனவும், பல பகுதிகளில் பயிர்கள் காய்ந்து விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

மொத்தத்தில் வளர்ச்சி நின்று போய் உள்ளது. இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. வீடுகளுக்கான சந்தைச் சரிவை சந்தித்துள்ளது. விநியோகப் பிரச்னை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இப்படி அனைத்து முனைகளிலும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு சீனா தள்ளப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. நிலைமை சரியாவதில் பிரச்சினைகள் நீடித்தால், அரசியல் ரீதியாக கவனத்தை மடைமாற்றம் செய்யும் முயற்சியை கூட, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கொள்ளக் கூடும் என்றும் புவிசார் அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உச்சகட்டமாக அனைத்துக்கும் காரணம் அதிபர் ஜின்பிங் என்று கைகாட்டி, மக்களை சாந்தப்படுத்த முயற்சிக்கலாம் என்கின்றனர். தற்போது சீனாவிலிருந்து வெளியாகும் தகவல்கள், இதைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

(நன்றி: ‘தினத்தந்தி’)

# கட்டாய மதமாற்றம், பலவந்தத் திருமணம் பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் அதிகம்

பாகிஸ்தானின் இந்து மதத்தை சேர்ந்த மூன்று குழந்தைகளின் தாயான ஒரு பெண் மற்றும் இரண்டு சிறுமியர் கடத்தப்பட்டு, கட்டாயமாக முஸ்லிம் மதத்துக்கு மாற்றப்பட்டனர். பின், முஸ்லிம் மதத்தை சேர்ந்தவர்களுக்கு கட்டாயத் திருமணமும் செய்து வைக்கப்பட்டனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணம் நசர்பூரில் வசிக்கும் மீனா மேக்வர் (வயது14) என்ற சிறுமி சமீபத்தில் கடத்திச் செல்லப்பட்டு, முஸ்லிம் மதத்துக்கு மாற்றப்பட்டார். பின், முஸ்லிம் இளைஞருக்கு கட்டாய திருமணம் செய்து வைக்கப்பட்டார்.

இதேபோல், மிர்புர்காஸ் நகர மார்க்கெட்டுக்கு சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மற்றொரு இந்துச் சிறுமியும் கடத்தப்பட்டு கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு முஸ்லிம் இளைஞருக்குக் கட்டாய திருமணம் செய்து வைக்கப்பட்டார். இந்நிலையில், அதே நகரில் வசித்த மூன்று குழந்தைகளின் தாயான இந்து மதத்தைச் சேர்ந்த பெண்ணை கடத்திச் சென்று கட்டாயப்படுத்தி முஸ்லிம் மதத்துக்கு மாற்றியுள்ளனர். பின், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஒருவருக்கு திருமணமும் செய்து வைத்துள்ளனர்.

இது குறித்து, அந்தப் பெண்ணின் கணவர் கொடுத்த புகாரை பொலிஸார் வாங்க மறுத்து விட்டனர் எனக் கூறப்படுகின்றது. பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில்தான் இந்துக்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர். அதேபோல் கட்டாய மதமாற்றம் மற்றும் திருமணமும் இங்கே அதிகமாக நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

# போசாக்கு நிலைமை தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்!

கிளிநொச்சி மாவட்டத்தில் போசாக்கு நிலைமைகளை தொடர்ந்து பேணவும், உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் செயற்பட அனைத்து தரப்பினது ஒத்துழைப்பும் அவசியம் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாவட்ட விவசாய குழு கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றும் போதே மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு உற்பத்தியை மேம்படுத்தும் விதத்தில் அரசாங்கத்தால் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கின்ற உணவு பாதுகாப்பு செயற்திட்டத்தையும் கரிசனையோடு முன்னெடுக்க அனைத்து திணைக்களத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இதுவரை எமது மாவட்டத்தில் உணவு உற்பத்தி சம்பந்தமான விடயங்களும், போசாக்கு சம்பந்தமான விடயங்களும் பாதிப்புறும் வகையில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாங்கள் உணர்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் போசாக்கு நிலைமைகளைத் தொடர்ந்து பேணவும் உணவுப் பாதுகாப்பை அதாவது பட்டினி என்ற நிலைமை இல்லாது நமது மாவட்ட மக்கள் அனைவரும் உணவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்படியான கருத்துத்திட்டங்களையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

குறிப்பாக உணவு உற்பத்தி போசாக்கு சம்பந்தமான விடயங்களில் அதீத அக்கறை கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் சிறி மோகன், மேலதிக அரச அதிபர்( காணி) மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர், விவசாய உதவிபணிப்பாளர் மற்றும் துறை சார்ந்த திணைக்களத் தலைவர்கள் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# சிறுவர்களுக்கான போசாக்கு உணவுகளை வழங்கக்கோரி கிளிநொச்சியில் போராட்டம்







கிளிநொச்சி புண்ணை நீராவி பகுதியில் தமது குழந்தைகளுக்கான போசாக்கு உணவை வழங்குமாறு கோரி பெற்றோர்கள் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புன்னை நீராவி பகுதியில் இயங்கி வரும் திருச்சபை ஒன்றின் ஊடாக குறித்த பிரதேசத்தில் உள்ள 334 சிறுவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருவதுடன் மாலை நேர கற்றல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன எனவும் மேற்படி திருச்சபையில் இடம் பெற்ற நிர்வாக சிக்கல்காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக மாலை நேர கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டதுடன் சிறுவர்களுக்கான போசாக்கு உணவு வழங்குகின்ற செயற்பாடும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துமாறு கோரி கோரியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருச்சபை ஊடாக 334 சிறுவர்கள் மாலை நேர கல்வி செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையுடன் இதில் 81 சிறுவர்கள் போசாக்கு குறைவானவர்களாக இருக்கின்றனர் எனவும் அவர்களுக்கான குறித்த போசாக்கு வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதாகவும் தற்போது அவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுவிழா மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஆரம்பம்!















தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுவிழா 2022 ஆம் ஆண்டுக்கான **Tamil Para Sports** தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுவிழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமானது. அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மாற்றுத்திறனாளிகள் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

மாற்றுத்திறனாளிகளை மீண்டும் மீண்டும் பேசுபொருளாக்கி, அவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களை உருவாக்க வேண்டுமென்பது இந்த மாற்றுத்திறனாளிகள் விளையாட்டின் நோக்கமாகும். அதே வேளை இந்த மாற்றுத்திறனாளிகள் விளையாட்டில் பங்குபெறும் விளையாட்டுவீரர்கள் தேசிய அளவில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழாவில் பங்குபற்றி வெற்றி ஈட்டுவதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

நேற்றைய தினம் மட்டக்களப்பு சிவானந்தா மைதானத்தில் உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கும் இடையில் சத்தப்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அந்த சத்தப்பந்து கிரிக்கெட் போட்டியில் உதயம் விழிப்புலனற்றோர் அணி வெற்றி ஈட்டியது.


ஒவ்வொரு தடவையும் **Tamil Para Sports** நடைபெறுகின்ற போதும் ஒரு விசேட நிகழ்வாக சத்தப்பந்து கிரிக்கட் போட்டி நடைபெறுவதோடு, இந்த போட்டியில் பங்குபற்றும் வீரர்களில் சிலர் இலங்கையின் தேசிய சத்தப்பந்து கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விளையாட்டில் சிறப்பு விருந்தினராக இலங்கை தேசிய சத்தப்பந்து கிரிக்கட் போட்டி குழுவின் செயலாளர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் பேசும் போது, இவ்வாறான போட்டிகளில் பல சத்தப்பந்து கிரிக்கெட் வீரர்களை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும், அவர்கள் தேசிய அணியில் போட்டியின் அடைப்படையில் தெரிவு செய்வதற்குத் தாங்கள் ஏற்பாடுகளை செய்ய முடியும் என குறிப்பிட்டார். இந்த **Tamil Para Sports** இன்று வெபர் மைதானத்தில் கோலாகலமான நிறுவு நாள் நிகழ்வுகளோடு நிறைவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுட்பியல் அவத்தை

## தரவுத்தள முகாமைத்துவ முறைமை

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




நாம் வியக்கத்தக்க வகையில் மிகவேகமாக வளர்ந்து வரும் நுட்பியல் அவத்தையில் வாழ்ந்து வருகின்றோம். பொதுவாக நாம் பயன்படுத்தும் அனைத்துவிதமான நுட்பியல் பயன்பாடுகளும் அடிப்படையில் தரவுசார்ந்த ஒரு முறைமையாகவே காணப்படுகின்றன. எமது விரல்நுனியில் தகவல்கள் உள்ளன. எண்ணிலடங்கா இந்த தகவல்களை ஒரு கிளிக் செயவதன் மூலம் சில நொடிகளில் பெறமுடிகிறது. அதற்கு காரணம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாகும். இவ்வாறான தரவுகளை முகாமை செய்து ஒழுங்கமைத்து சேமித்து வைத்து பயன்படுத்தும் தொழில்நுட்பம் 'தரவுத்தள முகாமைத்துவம்' எனப்படும். அதாவது இது தரவினை முகாமை செய்யும் ஒரு மென்பொருள் என்று குறிப்பிடலாம். இது வன்பொருளுடன் சேர்ந்து வெவ்வேறு புவியியல் இடங்களிலிருந்து தரவை அணுக பயனர்களை அனுமதிக்கின்றது.

இவ்வாறான தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள் பல்வேறு வகைகளில் விரிவடைந்து வருகின்றன. அதனது வடிவங்களும், பயன்களும் மாறுபட்டு வருகின்றன. உலகெங்கும் தரவுத்தள முகாமைத்துவ முறைமை அமைப்புகளுக்கான சந்தை வேகமாக வளர்ந்து வருகிறது, ஆராய்ச்சி மற்றும் சந்தைகளின் படி, உலகளாவிய தரவுத்தள முகாமைத்துவ முறைமையின் சந்தை 2020 இல் $63.9 டிரில்லியனை எட்டியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் 2027 இல் $142.7 டிரில்லியனை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.


நிறுவனங்கள் தங்கள் தரவுக் கிடங்குகள் மற்றும் தரவு ஏரிகளை மேக சேமிப்பு (Cloud Storage) அமைப்புகளில் இணைக்கின்றன. தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள் மேகக்கணிக்கு மாறுவதற்கு பரந்த அளவிலான புதிய தரவு வடிவங்களுடன் மாறிக்கொண்டிருக்கின்றன. தரவுத்தள மேலாண்மை அமைப்புகள் புதிய அம்சங்களையும் புதிய விருப்பங்களையும் உருவாக்குவதால், நிறுவனத்தின் தற்போதைய அமைப்பை மறுபரிசீலனை செய்து, அனைத்து புதிய விருப்பங்களையும் கருத்தில் கொள்வது அர்த்தமுள்ளதாக இருக்கிறது

**2022 இல் தரவுத்தள மேலாண்மை போக்குகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

1. கிளவுட் அடிப்படையிலான தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்
2. தானியங்கும் தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்
3. மேம்படுத்தப்பட்ட தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்
4. அதிகரித்த பாதுகாப்புடனான தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்
5. முதன்மை நினைவகத்தில் தரவுத்தளங்கள்
6. வரைபட தரவுத்தளங்கள்
7. திறந்த மூல தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்
8. ஒரு சேவையாக தரவுத்தளங்கள்



இந்த போக்குகள் பெருமளவில், இணையத்தில் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை வழங்க விரும்பும் வணிகங்களை அடிப்படையாகக் கொண்டவை.



**1. கிளவுட் அடிப்படையிலான தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்**



தரவுத்தள முகாமைத்துத்தின் எதிர்காலம் கிளவுட் உடன் சேர்ந்த பாவனையாக மேலும் அதிகரிக்கும் என அறிக்கைகள் எதிர்வு கூறுகின்றன. மேம்படுத்தப்பட்ட தரவு பகிர்வு, மேம்படுத்தப்பட்ட தரவு ஒருங்கிணைப்பு மற்றும் தரவு பாதுகாப்பு போன்ற வசதிகள் கிளவுட் அடிப்படையிலான தரவுத்தள மேலாண்மை அமைப்பைப் பயன்படுத்துவதற்கான காரணங்களாகும்.

தற்போது சாதாரண தரவுத்தள அமைப்புக்களைப் பயன்படுத்தும் நிறுவனங்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. எனினும் அவை கிளவுட் அடிப்படையிலான தரவுத்தளத்துடன் இணைத்து 'கலப்பின' அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றன.

**2. தானியங்கும் தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்**

தற்போது தரவுகள் இணையத்தில் பெருமளவில் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றை தரவுத்தளத்தில் சேமிப்பதற்கான பிரித்தெடுப்பை தானியங்கு சேவைகள் ஆற்றுகின்றன. இதில் இணையவழி, மொபைல் பயன்பாடுகள், வாடிக்கையாளர் உறவு முகாமை மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றால் உருவாக்கப்படும் பெரிய அளவிலான தரவுகள் பிரித்தெடுக்கப்படுகின்றன. இதன் விளைவாக, நிறுவனங்கள் சேமித்து வைக்கப்படும் தரவுகளின் அளவுகளில் மிகப்பெரிய அதிகரிப்பை அனுபவித்து வருகின்றன. இந்த பெரிய அளவிலான தரவு, வணிகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படலாம், இது அவர்களின் வாடிக்கையாளர்கள் மற்றும் தயாரிப்புகள் பற்றிய பயனுள்ள நுண்ணறிவுகளை வழங்குகிறது. தரவு செயலாக்கத்தை தானியக்கமாக்குவது, கைமுறையாகச் செய்யக்கூடியதை விட மிக வேகமாகச் செயல்படுவதன் மூலமும், மனிதப் பிழையை நீக்குவதன் மூலமும் செயல்திறனை மேம்படுத்துகிறது.

தரவு பகுப்பாய்வு செயல்முறையின் ஒரு பகுதியாக தானியங்கிசேவையை கொண்டிருப்பது, தரவைத் தயாரிப்பதற்குப் பதிலாகத் தரவை பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்த ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகிறது. தானியங்கி சேவை பல தரவு மூலங்களிலிருந்து தரவை ஒருங்கிணைக்க உதவுகிறது. உதாரணமாக வாடிக்கையாளர் ஆதரவு. பணியாளர் பகுப்பாய்வு. கொள்முதல் உத்தரவு பதிவுகள். கூட்டங்களை திட்டமிடுதல் போன்றவற்றில் தரவு ஒருங்கிணைப்பு மற்றும் தரவு ஆளுமை ஆகியவற்றை வழங்க தானியங்கி சேவை பயன்படுத்தப்படுகிறது.

**3. மேம்படுத்தப்பட்ட தரவுத்தள முகாமைத்துவ முறைமைகள்**

சமீப காலம் வரை, தரவுத்தள முகாமைத்துவ அமைப்புக்கள் நம்பகத்தன்மையை வழங்கும் நிலையான, நம்பகமான கட்டமைப்புகளாகக் கருதப்படுகின்றன. இந்த பரிணாமத்தை அணுகுவதற்கும், கிளவுட் வழங்கும் பொருளாதார பலன்களைத் தழுவுவதற்கும், வணிகங்கள் பெருகிய முறையில் கிளவுட் தரவுத்தளங்களுக்கு மாறுகின்றன.

தற்போது பெரும்பகுதி நிறுவனங்கள் தங்கள் தரவுத்தள மேலாண்மை அமைப்புகளை கிளவுட்க்கு நகர்த்துவதன் மூலம் இயக்கப்படுகிறது, இது விரைவான ஒருங்கிணைப்பு மற்றும் உள்ளமைவை வழங்குகிறது. கூடுதலாக, மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் சிறந்த கருவிகள் ரிமோட் வேலையை மிகவும் நியாயமான விருப்பமாக மாற்றியுள்ளன, மேலும் சந்தையின் தற்போதைய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தரவுத்தளங்களில் அதிகரித்து வரும் கோரிக்கைகள் – மற்றும் அதிகரித்து வரும் தீர்வுகள் – புதிய தரவுத்தள முறைமை அமைப்பைத் தேர்ந்தெடுப்பதில் ஆராய்ச்சியை முக்கிய படியாக ஆக்குகிறது.

(தொடரும்.....)

*இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.*



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 132**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## திம்பு தீர்மானமும் அதன் முன்னெடுப்பும்

இனப்பிரச்சினைத்தீர்வுக்காகநோர்வே அரசினால் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோற்றுப் போய், முடிவு ஒன்றை எட்டப்படாதமையில், ஆளும் வர்க்கத் தரப்புகளிடமிருந்த அதிகாரத்திற்கான பூசல்கள்தான் முக்கிய பங்கு வகித்தன என்பது மதியுரைஞர் பாலசிங்கத்தின் கருத்தும் கூட.

அவர்கள் இனப் பிரச்சினையின் அடிப்படைகளை அறியாமல் இல்லை. ஆனால் அதனை புரிந்து செயல்பட்டால், தங்கள் வாக்கு வங்கிகளின் ஆதரவுகள் இழக்கப்படலாம் என்ற கணிப்பும், அதிகாரத்தில் இருக்கும் ஒரு பகுதி மற்றவர்களை விடத் தான் சிங்கள, பௌத்த ஆதிக்கத்துக்கு ஆதரவு கூட தந்தால் அதைவிட மேலதிகமான ஆதரவை பெற்று விடலாம் என்ற எண்ணமும் அத்தகைய தீர்வுக்கு வர முடியாமல் நெருக்கடியை வளர்த்தமைக்குக் காரணம் என்பது அவரது மதிப்பீடு.

ஆகவே, இனப்பிரச்சினையைத் தீர விடாமல்தங்களது அனுகூலங்களுக்காக வளர்த்துக் கொண்ட அரசியல்வாதிகளுடனும், சிங்கள பௌத்தம் நிலைநிறுத்தப்பட்டு நாடு முழுவதிலும் அவர்களது அதிகாரம் அமைய வேண்டும் என ஆர்ப்பரித்த பேரோண்மையுடனும்தான் தமிழ் மக்கள் மோத வேண்டி இருந்தது.



கஜேந்திரகுமார்

அவற்றுக்காகவே யாக்கப்பட்ட அரசமைப்புகள் எந்த ஒரு தலைவரும் எதையாவது செய்வதற்கு சிந்தித்தாலும், அதற்கு வழிமுறைகளை தரக்கூடிய வகையானவையாக இருக்கவில்லை.

பிரித்தானியா சுதந்திரம் தருவதற்காக சிங்கள, தமிழ் தலைவர்களுடன் பேச்சுக்களைத் தொடங்கிய போது இரண்டு இனங்களின் அல்லது தேசங்களின் இறைமைகளை மீண்டும் அவரவர்களிடமே தந்துவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகள் எதுவும் தமிழ் தலைவர்களால் வைக்கப்படவில்லை. ஒரு நாட்டுக்குள் அமையப்போகும் அதிகாரத்தில் ஆணித்தரமான பங்கை எப்படி பெற்றுக்கொண்டு வாழலாம் என்ற சிந்தனைதான் முன்னிருந்தது.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தை வெகுவாகக் கற்று, தமிழ் மக்கள் பலர் எல்லா பரப்புகளிலும் – அது அரசாங்கமோ அன்றில் தனியார் துறைகளோ – அவற்றில் கணிசமான அளவு உத்தியோகங்களில் இருந்தார்கள். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து, செறிந்து அங்கு வியாபாரங்கள், வாணிபங்கள் செய்து கொண்டும் இருந்தனர். அந்த நிலைமைகளுக்கு மாற்றமில்லாத அதிகாரத்தில் காத்திரமான பிடி ஒன்று இருந்தால் அவை அவர்களுக்கு நன்மை தரும் என்று சிந்தனைகளில்தான் '50 க்கு 50' என்ற கருத்து ஜீ.ஜீ.பொன்னம்பலத்தால் முன் வைக்கப்பட்டது.



விக்னேஸ்வரன்

இவை அரசமைப்பு ஆக்கத்துக்கு பொறுப்பாக இருந்த சோல்பரி பிரபுவாலுமே ஏற்றுக்கொள்ளப்படாது, அதிகாரம் சிங்கள மக்களின் கைகளில் பெரும்பான்மையானவர்களான நிலையில் கையளிக்கப்பட்டது.

ஆனால் மற்ற சிறுபான்மை இனத்தவருக்கு மாறாக, எதுவித பாதகமான நிலையையும் ஏற்படுத்தக்கூடிய சட்டங்களை இயற்றக் கூடாது என்ற சரத்துகளுடனும் அரசமைப்பு ஆக்கப்பட்டது.



ஜீ.ஜீ.பொன்னம்பலம்



பாலசிங்கம்

ஆனால் சிங்கள பேரோண்மை இவற்றிற்குள் சுழியோடி, இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்துச் சட்டமாக்கிய போது, தங்களது நிலையை உணர்ந்து கொண்ட தமிழ் மக்கள், பேரினவாதத்திற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி என்று அமைப்பின் கீழ் தங்களது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள அரசியல் ரீதியாக வடிவம் தந்தனர்.

தமிழரசுக் கட்சி கேட்டது சமஷ்டிக்கான அடிப்படைகளில் அமைந்து அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக அரசுதான். ஆனாலும் சிங்களப் பேரினவாதம் அதனை நாட்டின் பிரிவினையாக பிரச்சாரங்கள் தந்து, இன்றைய இனப் பிரச்சினைகளுக்கு வித்திட்டது.


அதனைத் தொடர்ந்து காலக்கிரமமாக நடத்தப்பட்ட அட்டூழியங்களாலும் அரச பயங்கரவாதங்களாலும் சமஷ்டிக் கோரிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியால் தனி நாட்டுக் கோரிக்கையாக – இழந்த உரிமைகள் மீளப்படுவதற்கான போராட்டமாக உருவகப்படுத்தி, அதனை விடுதலைக் குழுக்களும், பின்னர் விடுதலைப் புலிகளும் ஆயுதப் போராட்டமாக முன்னெடுத்தனர்.

இந்த வன்முறைப் போராட்டமும், அது தீவிரப் போராக நடந்ததும் பிரிவினையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் சிங்கள மக்கள் மத்தியில் உறுதியாக்கியது.

இந்தியா சுதந்திர தமிழீழத்தை ஆதரிக்க முடியாது என திம்பு மாநாட்டுக் காலங்களில் மிகத் தெளிவாகத் தெரிவித்து, அதற்கு மாற்றான தீர்வை தமிழ் மக்களிடமிருந்து கோரிய போது, அவர்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து திம்புத் தீர்மானத்தை முன் வைத்தனர். அந்தத் தீர்மானம் தமிழ் மக்கள் நாடும் தீர்வை மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளது என கருதப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுத பலத்தினால் போரை விடுதலை நோக்க நடத்திய பொழுது தமிழ் மக்கள், தங்களது சுயநிர்ணயத்தில், தங்களது உரிமையாகக் கணிப்பது சுதந்திரமான இறைமையுள்ள தமிழீழமே எனக் கேட்கப்பட்டது. சர்வதேசப் பார்வையில் அந்தப் பிரிவினைவாதத்துக்கு ஆதரவு கிடைக்காததாலும், இந்தியாவின் பிராந்திய அதிகாரத்திற்கு எதிரான நடவடிக்கையாக அது அமையும் என்பதாலும், அதனை முன்னெடுத்த விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டார்கள். அவர்களது அழிவில் அவர்கள் சித்தாந்தத்தின் அடிப்படையாகப் பிறந்தது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம். ஆகவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழ் மக்களின் இறைமையை மீள நிறுத்திக் கொள்ளவே அவர்களின் அரசியல் கோரிக்கையாக அவர்களது சுயநிர்ணய உரிமையில் முன்னேறுகிறார்கள் என சர்வதேசம் இனப்பிரச்சினைக்கான தீர்வுகளில் கருத்தாக்கம் கொள்கிறது.

அதேசமயம் நாட்டில் தமிழ் மக்களிடமிருந்து போருக்கு பின் கூட்டமைப்பு சமஷ்டிக்கான ஒப்புதலை பெற்றுள்ளது. அங்கு இறைமையோ அதை மீட்பது என்ற பேச்சுக்களோ எவையும் முன்வைக்கப்படவில்லை. போருக்கு பின் எழுந்த யதார்த்தத்தில் இவைதான் சாத்தியப்படக் கூடியனவாக இராஜதந்திர வட்டாரங்கள் ஏற்றுக்கொண்டு, சிங்களப் பேரினவாதத்திற்கு அழுத்தம் தரும் எனவும் கூறப்பட்டது.



சோல்பரி

சர்வதேச நிலையில் இதற்கு ஆதரவுகள் இருந்தாலும், 'இரு தேசங்கள்' என்று கஜேந்திரகுமாரின் கட்சியும், 'இணைந்த கூட்டாட்சி' என நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சியினரும் கூறுவதும், தமிழ் மக்கள் என்னதான் கூறுகிறார் என்ற குழப்பத்தை சர்வதேசத்தின் முன் அவர்களது பிரச்சாரங்களால் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, தமிழ் மக்கள் இதனை எப்படி அடையப் போகிறார் என்ற கேள்விகளும் எழுகின்றன.

(வளரும்....)

### நினைவுத் தூபி அருகே ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாக்குவாதம் முற்றிய நிலையில் மோதல் போக்கும் உருவானது.

இந்நிலையில் அங்கிருந்த சிலர் இரு தரப்பினரையும் சமரசப்படுத்தி அழைத்துச் சென்றமையால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இதேவேளை, தியாகி திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் முன்னணியின் இரண்டு அணியினர் நினைவாலயம் முன்பாக முரண்பட்டமை தொடர்பில் அவ்விடத்தில் நின்ற பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டனர்.

### தமிழர் தாயகம் எங்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நினைவு தினமான இன்று திலீபனின் தூபி முன்பதாகவுள்ள பருத்தித்துறை வீதி மூடப்படுமென அறிவித்துள்ள நினைவேந்தல் ஏற்பாட்டு பொதுக்கட்டமைப்பு தலைவர் வேலன் சுவாமிகள், வர்த்தக நிலையங்களை காலை வேளை மூடி நினைவேந்தலில் பங்கெடுக்க வர்த்தகர்களிற்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

உன்னத இலட்சியத்திற்காக உயிர் நீத்த தியாக தீபம் திலீபனுக்கும், கடந்தகால விடுதலைப் போராட்டத்தின் போது உயிர் நீத்த அனைத்து மாவீரர்களுக்கும், பொது மக்களுக்கும் இன்று காலை அகவணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இதனிடையே யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பிரதேசங்களிலிருந்தும் வாகன ஊர்திகள் புறப்பட்டு இன்று நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியடிக்கு வந்து சேரவுள்ளன.

இதனிடையே தூபிக்கருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கொட்டகையில் பதினொராவது நாளாகவும் திலீபனின் நினைவுகளைச் சுமந்து நேற்றுக் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று தாயகத்தின் பல பாகங்களில் இருந்தும் ஊர்திகள் இன்று காலை நினைவுத் தூபியை வந்தடைய இருக்கின்றன.

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த 10.48 மணிக்கு மலரஞ்சலி இடம்பெறவிருக்கின்றது. இதன்போதும் மக்கள் பெரும் எழுச்சியாகப் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்பட இருக்கின்றது.

### ஆர்ப்பாட்டக்காரர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைதுசெய்யப்பட்ட 84 பேரையும் விடுதலை செய்யவேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 84 பேரையும் கைதுசெய்துள்ளதன் மூலம் இலங்கை அதிகாரிகள் கருத்து வேறுபாடுகளை தாங்கள் சகித்துக் கொள்ளப்போவதில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர் என சர்வதேச மன்னிப்புச்சபை தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

கருத்து வேறுபாடுகளை கொண்டவர்களை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிற்கு எதிராகவே இவர்கள் அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

### ஆர்ப்பாட்டத்தின் போது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர்.

சோசலிச இளைஞர் அமைப்பு நேற்று ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தை கலைப்பதற்குபொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, சட்டத்தை மீறியமைக்காக் 84 பேரை தமது பொறுப்பில் எடுத்தனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காயமடைந்த சிலர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர மற்றும் இரண்டு தேரர்கள் இன்றைய தினம் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர். இதன்போது அவர்களை பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

ஏனைய 80 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சோசலிச இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் போது 83 பேர் கைதுசெய்யப்பட்டமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடி அறிக்கையொன்றை கோரியுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இன்று காலை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### ரூ.2 கோடி பெறுமதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் நகரில் இருந்து ஓமான், மஸ்கட் ஊடாக விமானத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த பிக்குவின் பயணப் பொதியில் இருந்து இந்தப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என விமான நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 225 லட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள், மடிக்கணினிகள், தங்க பிஸ்கட்கள் மற்றும் தங்கத் கட்டிகள் போன்றவற்றை சந்தேகநபர் நாட்டுக்கு கொண்டு வந்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வசித்து வரும் பிக்கு 23 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட பொருள்களைப் பறிமுதல் செய்து சந்தேகநபருக்கு அபராதம் விதித்த பின்னர்வரை விடுவிக்க சுங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### சீனா - இலங்கை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடியும் என கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

### 'கொமடி' அரசியல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்ற புலம்பெயர் தமிழர்களுடனான ஒருசந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கைதிகளின் பட்டியலை கோரியிருந்தார் என்று செய்தி வெளியாகியிருந்தது.

இந்நிலையில் தனது டுவிட்டர் பதிவில் அதனை மேற்கோளிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதற்கு பதிலாக 1978 முதல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்களின் விவரத்தை சிறைசாலை ஆணையாளரிடம் ரவர் கோர முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம் -
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத சட்டத்துக்கெதிரான போராட்டம் காலியில் மூவின மக்களும் திரண்டு பேராதரவு!

## சாணக்கியனுக்குப் பொன்னாடை போர்த்தும் கௌரவம்







கொழும்பு, செப். 26

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கடந்த சனிக்கிழமை 15 ஆவது நாளாக 14 ஆவது மாவட்டமாகக் காலியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை காலியில் மக்களின் பேராதரவு வழுங்கியிருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அங்கு பொன்னாடை போர்த்தப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். இந்தத் துணிகர செயற்பாட்டை மெய்ச்சும்வகையில் இந்து மதகுரு ஒருவர் தன் ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் சுமந்திரனைக் கட்டிப்பிடித்து ஆரத் தழுவினார்.

இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சர்வ மதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் இளைஞர் எழுச்சி ஒன்று உள்ளது அதில் மறைப்பதற்கு எதுவுமே கிடையாது!

## ரொசான் ரணசிங்க சுட்டிக்காட்டு

நாட்டில் இளைஞர்களின் எழுச்சி ஒன்று உள்ளது என்பதில் மறைக்க ஒன்றும் இல்லை என்று விளையாட்டு துறை அமைச்சர் ரொசான் ரனசிங்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மகாவலி குடயேற்றப்பகுதியல் உள்ளவர்களுக்கு காணி உறுதிகள் வழுங்கும் வைபவத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்தகாலங்களில் இளைஞர்களின் எழுச்சியை அவதானிக்க முடிந்தது. இது ஏதோ ஒரு வகையில் இளைஞர்களது மன உழைச்சலை வெளிப்படுத்துகிறது.

எனவே நாட்டில் பாரிய பிரச்சினை ஏற்பட்டு மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்பதில் இரு கருத்துக்கள் இல்லை.

எனவே அந்த அடிப்படையில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு எமது அமைச்சு இயன்றளவு உயர் நிலையில் ஏதாவது செய்லாம் எனத் திட்டமிடப்படுகிறது.

எனது அமைச்சின் கீழ் மகாவலி காணிகளும் வருகின்றன. நாட்டிலுள்ள மொத்த காணிகளில் மூன்றில் ஒரு பங்கு மகாவலி திட்டத்தின் கீழ் உள்ளன.

மகாவலி குடியேற்றங்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் அவ்வப்போது குடியேற்றப்பட்டன. அவை கூட்டுக் குடும்பங்களாக அதிகரித்து இன்று அவர்களுக்கு மத்தியில் காணிப்பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேற் குறிப்பிட்டவர்களில் சுமார் இரண்டு லட்சம் பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்று (நேற்று ஞாயிற்றுக்கிழமை) 15 ஆயிரம்



பேருக்கு காணி உறுதிகள் கையளிக்கப்பட உள்ளன,

மேலும் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பேருக்கு வழுங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு அங்குல காணியையும் உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இஸ்ரேல் பாரல வனத்தில் கூட சக்தியைக் குவித்து நவீன தொழில் நுட்பம் மூலம் காய்கறி உற்பத்திசெய்கிறது. இன்று இஸ்ரவேல் காய்கறி ஏற்றுமதி செய்யும் நாடாக உள்ளது.

சூரிய மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு டொலர் பிரச்சினை உண்டு. நாட்டில் அத்தியாவசிய தேவைகளாக எரிபொருள், பசளை போன்றவை காணப்படுகின்றன.

அதில் ஒன்றான மின்சார உற்பத்தியை சூரிய சக்தியில் இருந்து உற்பத்தியாக்குவது முக்கியமாகும், ஆனால் அதற்கு டொலர் பிரச்சினை தடையாக உள்ளது. எனவே அதற்குறிய வெளிநாட்டு முதலீட்டாளர்களை தேடிப்பிடிக்க வேண்டி உள்ளது. எனவே காலப்போக்கில் படிப்படியாக நாடு முன்னேறும் என்ற நம்பிக்கை உண்டு. –என்றார்.

# கேகாலையில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் பரிதாப சாவு!

கேகாலை பிரதேசத்தில் மண்மேடு ஒன்று சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கேகாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிசொவெல பிரதேசத்தில் 24 ஆம் திகதி சனிக்கிழமை மண்மேடு சரிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேம்பால நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த நபர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 40 வயதுடைய, மஹவ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# கொழும்புத் தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டு விழா

## ஆனைப்பந்தி குருகுல மண்டபத்தில் நடைபெறும்



பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப் பகிர்வுநிகழ்வு2022.10.02 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் யாழ்ப்பாண, ஆனைப்பந்தி குருகுல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப்பகிர்வு' என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, பேராசிரியர் செ.யோகராசா, கவிஞர் சோ.பத்மநாதன், முனைவர் க.இரகுபரன், தெ.மதுசூதனன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார்கள்.

நன்றி உரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2022இல் வெளியிடப்பெற்றது.